உ

கடவுள் துணை.

மதிருஸ்.

# தூக்குப்பாட்டு.

இஃது,

சிறுமணவூர்

## முனிசாமிமுதலியார்

அவர்களால்

இயற்றப்பட்டு,

தமது

சென்னை சூளை,

சிவகாமிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1905.

23

உ

கடவுள் துணை.

மதிருஸ்

# தூக்குப்பாட்டு.

இ-ம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

மதிமோசம் பாரீர்—பெண்ணாலே குடிகெட்ட
விதிவசங் கேளீர்

அநுபல்லவி.

பதிவிரதைபோல்தினம் புருஷனையேமாத்தி
சதிசெய்துபிள்ளையை க்ஷணத்தில்கொன்றுபோட்ட மதி

சரணங்கள்.

கொண்டகணவனுக்கு ரெண்டகம்நினைத்திட்டு
குடிகேடிபுருஷனை கிழமென்றுமதிப்பிட்டு
முன்தாரப்பிள்ளைமேல் மோகக்கவலைப்பட்டு
மோசமென்றறியாமல் ஆசையவன்மேல்வைத்து
கைபிடித்தாளாம் அவன் தாயாச்சுதேயென்று
கால்பிடித்தானும்

பெற்றதகப்பனுக்கு பின்தாரமாச்சுதே
பிள்ளையென்றெண்ணாமல் விபரீதம்நினைத்தாயே
பத்துமாதஞ்சுமந்து பால்தாராவிட்டாலும்
பாதுகாப்பதற்கு மாதாவாய்வந்தாயே
மதியெங்கேபோச்சு அடுக்காதிந்தப்பேச்சு
உலகத்துக்கேச்சு

தாயாகவந்துநீ தாரம்போல்மடக்குறாய்
தந்தையறிந்தாலென்ன நிந்தையாய்முடியுமே
தெய்வந்தான்பொறுக்குமோ தேசத்துக்கடுக்குமோ
சீச்சியென்னெதிராலே காட்டாதேமுகமென்றான்
பயந்தாற்போல் நின்றாள் தெரியாதென்குற்றத்தை
பொறுத்துக்கொள்ளென்றாள்—இவன்

சாஸ்திரந்தெரிந்தாற்போல் சட்டங்கள்பேசுறான்
சரிசரியிவனைநாம் வரவரமசக்கலா
மென்றுமனதில்வைத்து மத்தஉத்தமிபோலும்
மேலுக்குஉபசாரம் நாளுக்குநாளாக

மனதையுங் கரைப்பாள் யிரும்புவுருகும்படி
நினைவுகள்கொடுப்பாள்—அவனை

கண்டால்துயிலைகொஞ்சம் களைத்துவிலக்குவாளாம்
காமக்குறியைக்காட்டி யேமாந்துநிற்பாளாம்
அண்டையிலிருந்தாலு மறியாப்போலிடிப்பாளாம்
அடுத்துப்பின்துடர்ந்தாலுங் கடுத்தாப்போலிருப்பாளாம்

சோர்ந்திடுவாளாம் தலையைவலிக்குதென்று
சார்ந்திடுவாளாம்

கலையைக்கலைந்துபோட்டு கிணற்றிற்குவருவாளாம்
காணாமல்வந்தாற்போல் சடுக்கென்றுமறைவாளாம்
இலையிலேயவன்விட்ட யெச்சிலைதின்பாளாம்
யெண்ணம்வருகும்படி பண்ணதந்திரத்தாலே மதி

கும்மி.

இத்தனைகோலம் வருகிறசண்டாளி யென்னென்ன வித்தைகள் கற்றிருப்பாள், சற்றுங்கணவன் சந்தேகப்படாமலே சந்திர மதிபோல நடந்துவாராள்.

புருஷன்தொழிலுக்கு போகுமட்டும்யிவள் பூமியைப்பார்த்து நிமிராளாம், சிறுவன்வருகையைக் கண்டுவிட்டாலப்போ சோலைக்கிளிபோல கொஞ்சுவாளாம்.

பெண்ணாலேயெல்லா முடியுமென்றுஐயா முன்னோர்கள் சொன்ன பழமொழிபோல், யெண்ணந்திரும்பா திருந்திட்டபிள்ளைக்கு யெப்படியோசுகந் தந்துவிட்டாள்.

எப்படியோயிவன் யெண்ணந்திரும்பியே யின்பசுகங்களைக் காட்டிவிட்டு, கைப்பிடிநாயகன் போலயிருவரும் ஒப்பியிருந்தார் சிலகாலம்.

அண்டையயலார் தெரிந்துவிட்டார் பின்னால் கொண்டவன் தன்னை சிரிக்கலுற்றார், கண்டுபிடித்தல்லோ கேட்கவேணுமென்று முண்டைபோல்பேசா திருந்துவிட்டான்.

படுத்துயிருவருந் தூங்கையிலேயிவன் பார்த்துபிடித்திடவேணுமென்று, கடுத்தமுகக்குறி காட்டாமல்தினம் கண்டுங்காணாம லிருந்துவிட்டான்.

நித்தமொருநாளாய் போகுதையாயிவன் நேராய்பிடிக்கவுங் கூடலையாம், யெத்தனஞ்செய்தே யிருக்கையிலேயிவர்க் கென்ன விதிவசம் நேர்ந்துதையா.

கொஞ்சிக்குலாவியே கட்டிலிலேயிவர் கூடியிருக்கையில்கண்டுவிட்டான், பஞ்சபூதங்கள் அஞ்சாமல்கிழவன் பட்டாகத்தி தயாருசெய்தான்.

பட்டாகத்தி தயாருசெய்தானிவளை வெட்டியேபோடத் துணிந்துகொண்டான், கட்டுசோர்கட்டடி கொஞ்சதூரத்திற்கு கால்வழிபோகவே வேணுமென்றான்.

பத்துநாளைக்குள்ளே வந்திடுவேன்பெண்ணே பத்திரம்பையனை பார்த்துக்கொள்ளு, சித்தங்கலங்காதே நானில்லையென்றிதோ சீக்கிரம்வாரேனென் றேநடந்தான்.

நொண்டிச்சிந்து.

கட்டுசாதங் கையில்பிடித்தான் இதற்குமுன் கத்தியெடுத்தொருபுறம் பத்திரம்வைத்தான் எட்டியிரண் டடிநடப்பான் உடனே யெண்ணுது மெண்ணிமனம் குண்ணிடுவான் கைகாலும் பதைபதைப்பான் யிவர்கள் கழுத்தை யறிவதெப்போ யென்றுநினைப்பான் ஊர்வழி நடப்பவன்போல் சீக்கிரம் ஓங்கிநடப் பான் காலை வாங்கிநடப்பான் பொழுதெப்போ மறையுமென்று ஐயா பார்த்திருப் பான்முகம் வேர்த்திருப்பான் அந்திப்பொழு தானவுடனே துரிதமாய் வந்தவழி யேதிரும்பி நெருங்கிக்கொண்டான் பேர்ஊரு காட்டாமல் வீட்டிலே பதுங்கிக்கொண் டானிருட்டில் ஒதுங்கிக்கொண்டான் (தந்தினம்)

விருத்தம்.

கிழவனையனுப்பிவிட்டேன் கேட்பவராருமில்லை
மகிழுடனென்னைச்சேரு மன்மதாவாடாயென்றாள்
தழுவியேமுத்தமிட்டு தாராளமாகப்பேசி
விழவிழசிரித்துக்கொண்டு விளையாடியிருக்கின்றாளே.

நொண்டிச்சிந்து.

கட்டியிறுகப்பிடிப்பாள் அவனை கனிவாயால் முத்தமிட்டு கடித்திடுவாள் தட்டி துடையைக்கடிப்பாள் திரும்பியுந் தலையைக் குறிகிமடி மேல்படுப்பாள் முகத்துடமுகமணைப்பாள் மோகமுடன்முத்திகொடுத் தேயிருக்கி பிரண்டிடுவாள் ஜெகத்தினில் தேவர் முதலாய்மனிதரும் சீராயிருந்திட்டாரோ கேளடாயென்பாள் பிரகஸ்பதிதேவன்மனைவி தாரையவள் பிள்ளைபோலசந்திரனை புணரிலையா பிரமனும்யோக்கியனோ பெற்றவள் முறையாம் ஊர்வசியை பிடிக்கிலையா துரோபதை பதிவிரதையோ கருணன்மேல் தொடுக்கிலையா மனந் துடிக்கிலையா சீதைபதிகடக்கிலையா மண்டோதரி சேதியதும் சிலதறியாயா கண்ணனதுநடவடிக்கை நீயே காணுவிட்டாலுங்கதை கேட்கிலையா உலகமிப்படியிருக்க இதற்குமுன் யு

லகங்களு மிப்படியே நடந்திருக்க நமக்குமாத் திரமென்னடா நாலுவேதமும் சாஸ்திரமும் குறுக்கிடுமோ பாவபுண்ணியமேது மனம்போனபடியே நடவாவிட்டால் சுகமேது.

விருத்தம்.

உலகமதி லுத்தமிக ளென்னைப்போல
பொருவருமே யில்லையென்று பசப்பிக்கொண்டு
குலநலமும் முறவவரையும் யெண்ணிடாமல்
கொண்டவனை ரெண்டோகஞ் செய்தகழுதை
பலகலையுந் தெரிந்தாற்போல் கதைகள்சொல்லி
யையனையுங் காமுகனாய் செய்துவிட்டாய்
தலையுருள வெட்டுகிறேன் பொறுடீயென்று
தன்மனதி லெண்ணிமெள்ள நெருங்கினனே.

கும்மி.

இவ்விதமாகவே கொஞ்சிக்குலாவியிருவரிருந்திடும் வேளையிலே வொவ்விமனது பொருக்காமல் கிழவன் ஓங்கியே கத்தி யெடுத்துவந்தான்.

நெஞ்சந்துடித்துபந்தத்திடவேகண்கள் நெருப்புப்பொரியும் பறந்திடவே, பஞ்சிலிட்டத்தீயைப் போலகிழவனும் பத்தியெறிந்தல்லோஓடிவந்தான்.

எனக்குமனைவியாய் வந்தவளேயெந்தன் பிள்ளைக்குசுகத்தை தந்தவளே, உனக்கல்லோகததிவீசுகிறேனென்று ஓங்கியொருவெட்டாய்போட்டுவிட்டான்.

கத்தியெடுத்தவன்வீசையிலேயந்த கண்டாரவோளிமறைந்துவிட்டாள், பெற்றசுதனும் பிள்ளையின்கழுத்து பளீலென்றுரெண்டாய் விழுந்துதையா.

ரெண்டாய்சிரசு விழுந்திடவுமிந்த முண்டம்விழுந்து புரண்டிடவும், கண்டவிடமெல்லாம் ரத்தப்பிரவாகம் கண்ணுலேகண்டுமயங்கிவிட்டான்.

பிள்ளைகழுத்துவிழுந்திடவேயந்த பிர்மத்திசுத்தி முழித்திடவே,கள்ளவிபசாரி அம்மணமாகத்தான் கந்தையைசுற்றிக்கொண்டோடிவந்தாள்.

கத்தியைக்கையில் பிடித்துக்கொண்டு இவன் பித்தனைப்போலபிணத்திக்கொண்டு, சுத்துமித்துமிந்தக் கழுதையெங்கேயென்று சுணங்கன்போலே யலையுகிறான்.

குடிக்கியெமனாய் வந்தமுண்டையிவள் கூச்சலோ ஏழூறு சேட்டிடுமாம், அடித்துப்புரண்டு தெருவில்வந்துஜெனம் ஆயிரமாயிரஞ் சேர்த்துவிட்டாள்.

அண்டையயலுள்ள ஆணும்பெண்ணும் புவி ஆளும் கெவர்ன்மெண்டுசேவகரும்,முண்டையிவளிட்டசத்தத்தாலேஜெனம்மூலபலம்போலே சேர்ந்துவிட்டார்.

வீதியடங்காத கூட்டங்கண்டு வுயிர் விட்டபிணம் போலேநின்றுவிட்டான், ஒதிடவாயுந்திறக்கவில்லைகிழவன் ஒன்றுமில்லாமல்மயங்கிவிட்டான்.

கட்டிக்கிழவனைக்கொண்டுவந்தாருடன் தட்டையுங் கூடவே வெட்டிவந்தார், பிட்டர் ஜெயிலிலே போட்டடைத்து நாளை கேசுகளாரம்பஞ் செய்தனராம்.

மாண்டபிணத்தையுந்தூக்கிவிட்டாரிவரை மாரிஜெயிலிலடைத்துவிட்டார், ஆண்டவன் போலவே ஜட்ஜி யெதிரிலே அனியாயக்கேசைவிளம்பலுற்ருர்.

சீராய்க்கிழவ னுரைத்துவிட்டாளிவள் சித்திராங்கிபோல மறைத்துவிட்டாள்,தாறுமாறெல்லாந்துரைகள்தெரிந்திவன் தலையைவாங்கும்படி தீர்மானித்தார்.

வைகாசிமாதம் இருபத்தெட்டாந்தேதி வாரமோதிங்கட்கிழமையிலே, பையவேஆறு மணிக்குள்ளேவாங்கிட பார்லிமெண்டாரிடவுத்திரவாம்.

உத்திரவுவர பார்த்திருந்தாரிவனை பத்திரமாகவேகாத்திருந்தார், தொத்திவருகின்ற தந்தியின்மார்க்கமாய் தூரத்துசேதியறிந்துகொண்டார்.

சேதியைக்கண்டதுந் திங்கட்கிழமையில் சூன்மாதம்ஒன்பதாந்தேதியினில்,வாதிகளெல்லாஞ் சொல்லிவாய்மூடுமுன் வாங்கிவிட்டார்களிவன்சிரசை.

கிழவன்சிரசையும் வாங்கிவிட்டாரிந்த கழுதையுங் கூடவேசிஷ்டைசெய்தார், யிழிவாந்தொழிலைபுரிந்தல்லவோயிவர்க் கித்தனை துன்பமு நேர்ந்துதையா.

தாயைப்புணர்ந்த கதையுரைத்துரெண்டு தாள்வலிதீராதிருக்குமுன்னே, ஒருபாவியுடக்கதை வந்துதையா பாடிமுடிக்கிறேன் நேசர்களே.

பணத்தில்பெரியோ னொருசீமான்திருப் பாப்புலியூரிலரண்மனையாம், குணத்தையுரைக்கவோர்பிள்ளையிலாமலேகோடானகோடிசிலவழித்தான்.

முன்செய்தகர்மத்தி னாலேயவருக்கு முக்கணன்பிள்ளையில்லாவிடுத்தும், தன்ஆசைக்கோர்பிள்ளை தத்துவாங்கியேதாவிவளர்த்து வருகையிலே.

சேர்த்துவளர்த்துக் கலைதீர்த்துநல்ல சித்திரம்போலே சீராட்டி, பார்த்தீபன்போலே வளர்த்து வருகையில் பத்தினிக்கோர் பிள்ளை தோன்றினதாம்.

தத்தெடுத்தப்பிள்ளை சீருய்வளர்ந்தபின் தனக்கொருபிள்ளை பிறந்ததினல், பெற்றமகன்தன்னை கொஞ்சிவளர்ப்பதை பெரிய பிள்ளையறிந்தானும்.

தன்னைமறந்து யிருப்பதுவும் அவர் தங்கள்மகனை வளர்ப்பதுவும், யெண்ணிபலவாருய் மனஞ்சலித்துஒரு யெத்தனம் செய்தானும் நேசர்களே.

நொண்டிச்சிந்து.

பிள்ளையில்லாததினல் நம்மை பிரியமுடனிதுவரை வளர்த்துவந்தார், உள்ளபொருள் பூஸ்திதியும் அப்பா உனக்கே யளிப்பேனென்று செப்பிவந்தார், தனக்கொருபிள்ளை பெறவேவேரெண்ணம் தரித்துக்கொண்டார் நம்மைவெறுக்கலுற்ருர், யினிஇந்தபிள்ளையவைத்தால் நமக்கு யெள்ளளவுங்கிட்டாது யென்றுதுணிந்து, வெட்டிவிட கத்தியெடுத்து சகோதரனை வேடிக்கைகள்காட்டி மெத்தைமேலழைத்து, அன்பான வார்த்தை யுரைத்து மெத்தைமேலழைத்துப்போ.யொருபுரந்தன்னிலே வைத்து, அப்படிப்படிபார்த்தான் அங்கே ஆறுமில்லா வேளையென்று கத்தியெடுத்தான், சிரிப்புகள்காட்டிக்கொண்டே கத்தியினல் கடுக்கென்று ஒருவெட்டாய் வீசியெறிந்தான், கையிரெண்டும் வெட்டத்துணிந்தான், அந்த காப்புகொலுசுரெண்டும் உருவிக்கொண்டான், ஆருக்குமகப்படாமல் தனது அரண்மனைநாடி சீக்கிரம்நடந்தான்,பின்னொருநாழிகடந்து பெற்றபிள்ளை தனைக் காணமென்று வீடுமுழுதும், அன்னையுந் தகப்பனிருவர் அடா அப்பா மகனேயென்று அழைத்துக்கொண்டு, மெத்தைபடியேறிப்பார்த்தார் அங்கே மழைபொழிந்ததுபோல் உதிரங்கண்டார் கைவேறு கால்வேறு தலைவேறு கரும்புபோல் வேறுபுரளக்கண்டார் அவர்படுந்துயரமதை ஆதிசேஷனுஞ்சொல்லி யழத்தரமல்லவாம். (தந்தினந்)

கும்மி.

பிள்ளையிருந்த அதிசயத்தைக்கண்டு பெரியமகனைத்தேடுகையில், கள்ளமில்லாமலே காணேமென்றவர் கலங்கியழுதே தேடலுற்ருர்.

தாயுந்தகப்பனுந் தேடிக்கொண்டேயிவனை தரணியெங்குமே அலையலுற்ருர். கூவியேபந்துக்கள் வேறொருவழியாய் மனங்குமிங்கி அழுகையிலே.

பிரஞ்சிகவர்னர் ஆளுமந்தவுடன் புதுச்சேரிபட்டணந்தன்னில் வொரு ஒதியஞ்சாலையென்னுந்தெருவில் அவனை ஒடியே கண்டு பிடிக்கலுற்றார்.

திரேகமுழுவதும் ரத்தக்குறிகளும் திருடிக்கொண்டோடிய சொத்துகளும், ஆருமேசாட்சிகள் வேண்டாமல்அவனுக் கதுவே திஷ்டாந்தரமாச்சுதையா.

கட்டியேஜட்ஜி யெதிரில்விட்டாரிவன் கையிலுள்ளசொத்தும் முன்னேவைத்தார், பட்டகதையெல்லாம் கேட்டுவிட்டு யிந்த பாவியைத்தூக்கிலே யேத்துமென்றார்.

சொல்லிவாய்ஜட்ஜியும் மூடுமுன்னேவுடன் சூழ்ந்துக்கொண்டாரெம தூதரைப்போல், கொல்லத்துணிந்து கொலைசெய்தபாவியை கூசாமல்தூக்கிலே மாட்டிவிட்டார்.

பிள்ளையைத்தாயார் புணர்ந்தகதையதின் பின்னாலே தம்பியைக்கொன்றகதை, விள்ளப்போனாலின்னம் வேணதுண்டுவிட மில்லாமலவிட்டேன் ஜெகத்தோரே.

பாவிகளின்கதை தீர்ந்துதையா அதை பாடியே வாய்கூட நொந்துதையா, கூவிசிலபுத்தி சொல்லுகிறேனதை கொண்டணைக்கவேணும் நேசர்களே.

துரோகத்தொழிலை நடத்தவேண்டாமிந்த துன்பத்துக்குயிடம் வைக்கவேண்டாம், திரேகமேநீரின் குமிழாகும் வீண் தோஷந்தேடாதீர்கள் நேசர்களே.

மாதுமேல்மையலைக்கொண்டல்லவாலங்கைமன்னனழிந்ததுங்கேழ்க்கிலையா, தோதகபுத்தியைநீங்கிவிட்டுநல்ல சுகத்தைத்தேடுங்கள் நேசர்களே.

காமம்யெவர்க்கும் யேமனையாகரை கண்டவராருமே யில்லையையா, பூமியில்வல்லவ னென்றுபேர்கொள்ளும் புத்தியைத்தேடுங்கள் நேசர்களே.

பெண்ணாலேஇந்திரன் புண்ணானன்பால சந்திரன் தேகமும் பின்னமானன், எண்ணக்கணக்குண்டோ பெண்ணாலே கெட்டவரெத்தனைகோடியோ நேசர்களே.

பெருமையறியா முரட்டுக்காலமிது சாமியைப்போற்றுந்திருட்டுக்காலம், சிறுமணவூர்முனி சாமிசொல்வாக்கியம் சோதித்துப்பார்கலி காலகுணம்.

தூக்குப்பாட்டு முற்றிற்று.